சிவமயம்

gistered as a News paperin Ceylon P. M. G. NO. H. A 69/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புக. ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு பங்குனிமீ அஉ (1947 மார்ச் 21 வெள்ளிக்கிழமை) [இல கூசு


## அப்பர் அன்பு

### திருநாவுக்கரசர் அருளிய திருக்கழிப்பாலைத் திருப்பதிகங்கள்

[வித்துவான் பண்டித சைவப் புலவர், க. வேந்தனார் அவர்கள் தமிழ் விரிவுரையாளர், பரமேசுவரக் கழகம்.]

திருநாவுக்கரசு அடிகளின் திருவுள்ளம சிவனருள் வெள்ளத்தில் தோய்ந்துவிட்டது. அவர் அன்பே உருவமாகிவிட்டார். சிவபெருமானிடத்தில் தாம்பெற்ற இன்பத்தை நுகர்ந்து, நுகர்ந்து மகிழ்கின்றார். மகிழ்ச்சி எல்லைகடந்து அலையிடுகின்றது; அடிகளோ தம்மை மறந்துவிட்டார். அன்பின ஐந்திணைக் காதல் நெறியில் நின்று தம்மை ஆட்கொண்ட சிவனை அணைய விரும்புகின்றார். தானுய்க் காண்கின்ற உண்மை நிலையில் கலந்து நிற்கின்ற அடிகள் தம்மைக் காதலியாகவும், திருக்கழிப்பாலைச் சிவனைத் தம்முடைய காதலனாகவும் வைத்துப் பாடுகின்றார், இங்ஙனம் காதல்நெறியில், இறைவனைப் பாடுகின்ற மரபு அருள் நூல்களிற் காணப்படுகின்றது. சிவநெறிச் செல்வர்களும் ஆழ்வார்களும் தங்கள் திருநெறித் தமிழில் இம்மரபினைப் பெரிதும் அமைத்துப் பாடியிருக்கின்றனர். அவற்றுள் இத்திருக்கழிப்பாலைத் திருப்பதிகம் நற்றாய் தன் மகளின் நிலைகண்டு, இரங்கிக் கூறும் முறையில், அருளிச் செய்யப்பட்டது.

1

என்மகளின் தன்மைகள் மிகப்புதுமையாகத் தோன்றுகின்றன. சின்னஞ்சிறுபருவத்திலேயே திருக்கழிப்பாலைச் சிவனைக் காதலிக்கின்றாள், இவள் அப்பர் பெருமானின் நிறத்தையேனும் கண்டறியாதவள். அவனின் திருப்பெயர்களை அன்புடன் போற்றிச் சொல்லி மகிழாதவள். அவனின் திருவுருவப் பொலிவை எப்படி உணர்வாள். என்னால் இவளின் மனநிலைமையை உணரமுடியாது. இவளின் குணத்தை அத்திருக்கழிப்பாலைச் சிவபெருமானே அறியவல்லவன்.

வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிலள்
எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள்
கண்ணுலாம்பொழில் சூழ்கழிப்பாலையெம்
அண்ண லேஅறி வானிவள் தன்மையே.

வண்ணம்-நிறம். வடிவம் திருஉருவப்பொலிவு. பொழில்—சோலை. அண்ணல்—பெருமையுடையவன்.

2

தேவர்களுக்கு அமிழ்தத்தைக்கொடுத்துத் தான் நஞ்சையே அமிழ்தமாக உண்டு மகிழ்ந்தவன். திருக்கழிப்பாலையில் எழுந்தருளிய எங்கள் தலைவன். அவனின் சிறந்த திருவடிகளையே இவள்—என்மகள் எப்பொழுதும் எண்ணிய வண்ணமாய் இருக்கின்றாள். யான் கூறுகின்ற அனபு மொழிகளையெல்லாம் பழித்துரைக்கின்றாள்.

மருந்து வானவர் உய்யநஞ் சுண்டுகந்து
இருந்த வன்கழிப் பாலையுள் எம்பிரான்
திருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்து ரைக்கிலும் என்சொற் பழிக்குமே

வானவர் மருந்து உண்டு உய்யத் தான் நஞ்சை உகந்து உண்டு இருந்தவன் என்க. மருந்து—அமிழ்தம் திருந்து—சிறந்த, அடைந்தவர்க்குவீட்டின்பத்தை அளிக்குஞ் சிறப்புடையது.

3

இவளோ, மழலைமொழிகள் மாறுத—திருந்தாத சொற்களையே கூறுகின்றாள். அச்சொற்கள் குழலின் ஓசைபோல இனிமை பொருந்திய குழந்தை மொழிகள். இத்தகைய குழந்தை மொழிகளால், காதலுரைத்துக் கழிப்பாலைச் சிவனை அழைக்கின்றாள். அழகா! கழிப்பாலையில் எழுந்தருளிய அண்ணலே! என்னை இகழவேண்டாம். இப்பொழுதே ஏற்றுக்கொள் என்று ஓலமிடுகின்றாள். நீங்கள் இவற்றைக் கேட்டால் வியப்படைவீர்கள்

மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலள்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலையெம் அண்ணலே
இகழ்வ தோஎனை என்றுகொள்என் னுமே

குழலின் நேர்மொழி—குழலின் ஓசையைப்போன்ற மொழி. என்றுகொள்—ஏற்றுக்கொள்.

4

சிவந்த திருமேனியில் வெண்ணீறு அணிந்த சிவபெருமான்மேல், இவள் மையல் கொண்டுவிட்டாள். இங்ஙனம் அக்கடவுள்மேற் கொண்டகாதலால் மிகவும் பெருமிதங் கொள்கின்றாள். ஒருவரையும்மதிக்கின்றாளில்லை. இவற்றை யான் எவரிடங்கூறுவேன். மழுப்படையைக் கையிலே தாங்கிய கழிப்பாலைச் சிவபெருமானே இவளை—இவள் தன்மையை அறிந்துகொள்வானுக.

செய்ய மேனிவெண் ணீறணி வான்றனை
மைய லாகி மதிக்கிலள் ஆரையும்
கைகொள் வெண்மழு வன்கழிப் பாலையெம்
ஐய னேஅறி வானிவள் தன்மையே.

செய்ய—சிவந்த; ஐயன்—தலைவன்.

அன்பர்கள் கருத்தில் வீற்றிருப்பவனைத் திருக்கழிப்பாலையில் எழுந்தருளிய முதல்வனை—ஒப்பில்லாதவனை உமையம்மையாரைத் தனது இடப்பாகத்தில் வைத்திருக்கின்ற தலைவனைத் (அவன் தன்னைத் தேடி வாரானாயின் தான் அவனைத்) தேடிக் காண வேண்டுமென்ற விருப்பம் என் மகளின் உள்ளத்தில் நின்று ஊஞ்சலாடுகின்றது. காதலும் நாணமும் அவளை அங்கும் இங்குமாக இழுக்கின்றன.

கருத்த னைக்கழிப் பாலையுள் மேவிய
ஒருத்த னைஉமை யாளொரு பாகனை
அருத்தி யாற்சென்று கண்டிட வேண்டு[மென்(று)
ஒருத்தி யாருளம் ஊசல தாடுமே.

கருத்தன்—கருத்துள் உறைபவன். உண்மைப் பொருளானவன் எனக் கூறினும் அமையும். ஒருத்தியார்—தனியாக நிற்பவன். புறப் பற்றும் அகப்பற்றும் ஒழிந்து, இறைவனையே உணர்ந்திருக்கும் தனிநிலை. (வரும்)

## கெடாக் கலகம்

### பொலிசார்மீது குற்றச்சாட்டு

மலாய்நாட்டில் கெடா இராச்சியத்தில் உள்ள தோட்டத் தொழிலாளரான இந்தியர் கலகம் விளைத்தனர் என்ற செய்தி மூந்தி இப்பத்திரிகையில் வெளியானது. அக் கலகத்தின் பயனாக ஓர் தோட்டத்தில் மாத்திரம் 21 இந்தியர் காயமுற்றனர் என்றும் 66 பேர் சிறையாக்கப்பட்டனர் என்றும் மலேயா இந்தியக் காங்கிரஸ்தலைவர் திவி என்பவர் கூறிவிக்கிறார்.

இந்தியத் தொழிலாளர் தமது நியாயமான உரிமைகளைப் பெற மாத்திரமே போராடினர் என்றும், அவர்கள் கட்குடித்தல் முதலாம் தீய பழக்கங்களை ஒழிக்குமாறு தம் சகோதரத் தொழிலாளர்க்குக் கூறியதையும் ஓர் குற்றமாக அதிகாரிகள் கருதி அவர்களை இம்சித்தனர் என்றும் தெரிகிறது.

இவ்விஷயமாகப் பொலிசார் மிகவும் வெட்கக்கேடான முறையில் மிருகத்தனமாக நடந்து ஏழைத் தொழிலாளரை வருத்தினர் என்றும் சில இந்தியப் பெண்களைப் பலவந்தமாகக் கற்பழித்தனர் என்றும் கூறப்படுகிறது.

கெடாக் குழப்பம் விஷயமாக, இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியான ஸ்ரீஜாத் செட்டூர் விசாரணை புரிந்து வருகிறார். அவர்தம் அறிக்கையை இந்திய அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த பின்னர் மேற்கொண்டு நடைவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

## இன்னும் 15லட்சம்

### மின்னேரியாவுக்குவேண்டுமாம்

மிஸ்ரர் சேனநாயக்கா அதிகாரத்துக்கு வந்தபின்னர், இந்த நாட்டின் செல்வத்திற் பெரும்பாகத்தை விழுங்கிவந்தது மின்னேரியாத் திட்டம். கோடிக்கணக்கானரூபாய்கள் அதன் பொருட்டுச் செலவாகிவிட்டன.

இப்போது மின்னேரியாக் குளத்தில் 444 000,000 கலன் தண்ணீர் தான்கொள்ளுமாம். இது போதாது, 800,000,000 கலன் கொள்ளத்தக்கதாக, அக்குளத்தைப் புனர்நிர்மாணம் செய்ய மிஸ்ரர் சேனநாயக்கா திட்டம் போட்டிருக்கிறார். அதற்குப் 15 லட்சம் ரூபா செலவாகும் என்றும், விஸ்தரிக்கும் வேலை மூன்று ஆண்டிற் பூர்த்தியாகலாம் என்றும் சொல்லப்படுகிறது.

மின்னேரியாக் குளத்தின் தண்ணீரைக்கொண்டு இதுவரை, ஆண்டுதோறும் 3 லட்சம் புசல் நெல் விளைவிக்கப்பட்டதாம் ஆனால் குளத்தைப் பெருப்பித்தபின், இதிலும் பார்க்க இருமடங்கு நெல் விளைவிக்கப்படலாமாம்.

## இதுதான் தேசக்கொடியா?

### எடுத்துச் செல்லுகிறார் மந்திரி!

.... ஸ்ரீதரன் ...

டெல்கியில் நடக்கும் ஆசிய மக்கள் மகாநாட்டில் பலதேசத் துவஜங்கள் பறக்கவிடப்படுமாம். இலங்கையிலிருந்து போகும் பிரதிநிதிகளும் இந்நாட்டுக் கொடியைப் பறக்கவிடுவது என்று ஓர் ஆலோசனை யிருந்து வந்தது. ஆனால் இந்த இலங்கை ஓர்ஜாதியார்க்கு மாத்திரம் உரியதல்ல. சிங்களர், தமிழர், இஸ்லாமியர் முதலியோர்க்கும் சொந்தமானது. ஆகவே எல்லார்க்கும் பொதுவான, எல்லார்க்கும் சம்மதமான ஓர் கொடி எது என்பதை ஆராயவேண்டும என்று மந்திரசபையினர் நிச்சயித்தனர்.

இதற்கிடையில் சுகாதார மந்திரி மிஸ்ரர் ஜோர்ஜ ஈ. டீ. சில்வா என்பவர், சென்ற செவ்வாய்க்கிழமை, ஓர் கொடியொன்று தூக்கிக்கொண்டு டெல்கிக்குப் போகிறார் என்றும் அதுவே இலங்கைக் கொடியென டெல்கியிற் பறக்கவிடப்படும் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

செந்நிறமான துணியில் ஓர் பொன்னிறமான சிங்கம் தன் முன்னங்காலினால் வாள் ஏந்திய பாவனையில் நிற்பதே இலங்கைக்கொடி என்று மிஸ்ரர் சில்வர், "ஓட்டம் பெருநடையாய்" அந்தக் கொடியைத் தூக்கிச் செல்லுகிறார்.

இலங்கையிற் தேசியக்கொடி விஷயமாக, இங்குள்ள சகல சமூகத்தினருடனும் ஆலோசனை செய்யப்பட்டதா? ஆலோசனைக்கு அழைக்கப்பட்டவர்கள் யார்? சிம்மக்கொடிதான் இலங்கையின் தேசியக்கொடி என்று எப்போதாவது, இலங்கைவாழ் மக்களால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதா? இந்த இலங்கை சிங்களர்க்கு மாத்திரம்தான் உரியதா? அவர்களின் ஜாதியக்கொடியாகிய சிம்மக்கொடிதான் இனி ஆரோகணிக்கப்படுமா? இத்தகைய கேள்விகள் இச் சந்தர்ப்பத்தில் எழுவது இயற்கை,

இன்று இலங்கையில் வகுப்புவாதம இன்னும் இருக்கிறது என்றும், அப்படியான வகுப்புவாதத்தைக் களைந்து, நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்குசேரவேண்டும் என்றும சிங்களத் தலைவர் பரக்கப் பேசிவருகின்றார்கள். ஆனால், இப்படியான அற்ப "சேட்டை"களினால்தான் வகுப்புவாதம் ஓங்குகிறது என்பதை இனறு சிம்மக்கொடி பிடித்து டெல்கிக்கு ஓடும் மந்திரிகளுக்கு விளக்கி இந்த இலங்கை எல்லார்க்கும் தாயகம் என்பதைத் தெருட்டவல்லாரில்லையா?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞூ
பங்குனி மீ அவ வெள்ளிக்கிழமை

## சைவக் கல்லூரிகளை விருத்தியுறச் செய்க

### IV

சமயபேதஞ் செய்யும்போது, அப்படிப்பேதஞ்செய்வோர் இரண்டு முறைகளை ஒன்றன்பின்னொன்றாக, இல்லையேல் ஏககாலத்திற்செய்துவருவர்; ஒன்று அந்தச்சிறுமியின் சொந்தச் சமயத்தையும் அதற்காகிய பழக்க வழக்கஒழுக்கங்களையும் பெற்றார் உற்றார்உறவினர்களையும்தங்கள் துர்ப்போதனையினால் வெறுக்கச் செய்தல்; அடுத்ததுதான் தம் சமயத்தை அப் பிள்ளைகட்குப் புகுத்துதலாம். இவ்வாறு சமயபேதஞ் செய்யப்பட்ட கன்னியர், பின்னர் தங்கள் வாழ்க்கைக்காகியவைகளை யெல்லாம், பெற்றார் உற்றார் பெரியோர் சொல்லும் பிரகாரம் கொள்வதை விட்டு, தாங்களாகவே இனிமேல் என்ன படிப்பது, என்ன செய்வது, எங்கே போவது, எவனைக் காதலனாகக் கொள்வது, கல்யாணஞ் செய்ய நேர்ந்த காலத்திலும் ஊரிலுள்ள ஏனையர் கூறுவதுபோல்முறைப்படி செய்துகொள்வதோ, இல்லையேல் அரச கன்னியர் செய்து வந்த முறையைப் பின்பற்றிச் சுயம்வரம் நடத்துவதோ, எவ்வாற்றானுங் கல்யாணம் நிறைவேறிவிட்டால், அதன் பிறகு கணவன் சொற்படி பெண்ணாகியதான் நடந்து கொள்வதோ, இல்லையேல் தன்சொற்படி கேட்டுத்தன் கணவன் நடந்துகொள்வதோ என்ற இந்த விவகாரங்களையெல்லாந் தன் பொறுப்பிற் சிந்தித்தேனும் இல்லையேல் தன்னேடொத்த சகிகளோடு கலந்து யோசித்தேனுந் தனித்தனி செய்யத்தலைப்படுவர்.

அந்நியமதப் பள்ளிக்கூடங்களிலே சைவச் சிறுமியர் படிப்பதனல் நேரக்கூடிய அநர்த்தங்கள் இன்னும் பல; அவற்றையெல்லாம் இங்கே எடுத்துக் காட்டப்புகின் விரிவுறும்.

இங்குள்ள மிஷன் பள்ளிக்கூட அதிகாரிகளும் ஆசிரியர்களும் சைவப்பெண்பிள்ளைகளைச் சமயசுவாதீனத்தோடும் சாதிக்குரிய பழக்க வழக்கங்களோடும் தங்கள் பாடசாலைகளிற் சேர்ந்து படிக்க இக்காலத்தாயினும் அநுமதி கொடுப்பார்களோ வென்றால், அப்படியன்று; உலகஞ் சீர்திருந்தத் திருந்த, சமயசுவாதீனம், சாதிக்குரிய சுவாதீனம் அரசியற் சுவாதீனமென்னு மிவைகள் வளர்ந்துவர, "வரவர மாமியார் கழுதை போலே' என்ற விதமாக, இந்த மிஷனரிமார் மாத்திரம் இச்சுவாதீனங்கட்கெல்லாம் இடையூறுடையாராய், முன்னரைக் காட்டிலும் இக்காலத்தில் ஒடுங்கிய மனப்பான்மை யுடையவர்களாய்த்தங்கள் பாடசாலைகளிலே சமயபேதஞ் செய்தலாகிய கருமத்தை ஆற்றத் தலைப்பட்டுக் கொண்டனர்; தங்கள் பள்ளிக்கூடங்களிலே தினந்தோறுஞ் சென்று படித்து மீண்டுவருஞ் சைவச் சிறுமியர்கட்கும், விடுதியிலிருந்து படிக்குஞ் சைவப் பெண்பிள்ளைகட்கும் சைவத்திற்கு மாறான துர்ப்போதனைகளைச் செய்தும், சுவிசேஷமென்று சொல்லப்படும் தங்கள் கிறீஸ்துமதச் சார்பான துண்டுப் புத்தகங்களையும் சைவமத கண்டனப் பிரதிகளையும் விரகறியாதவர்களாகிய சைவச் சிறுமியர் கையிற் கொடுத்து, அவற்றைப் படிக்கும்படி பலவந்தஞ் செய்கின்றனரென்ற முறையீடுகளைக் கேட்டுள்ளோம்; இங்ஙனம் நெருக்கப்படும் பிள்ளைகளுள் ஏழைச்சிறுமியர்கள் மாத்திரமல்லாமல், இங்குள்ள தக்க பிரபுக்கள் வழக்கறிஞர்களின் சிறுமியர்களுஞ் சிலர் அகப்பட்டுள்ளார்கள்; மேலும் மிஷனரிமாருள்ளே இங்குள்ள ஒரு சாரார் கிறீஸ்து சமயத்தவரை, இல்லையேல் சொந்த மதத்தை விட்டு கிறீஸ்துமதத்திற்கு மாறியவரையன்றி வேறெவரையும் ஆசிரியனாக, ஆசிரியையாகத் தங்கள் வித்தியாசாலையில் ஏற்றுக்கொள்ளுவ தில்லை யென்ற நியதி பூண்டவர்களாகக் காணப்படுகிறார்கள்;

கல்விமந்திரியாயுள்ளவர், இங்குள்ள பெரும்பான்மையினராகிய பௌத்த மக்கள் சைவமக்கள் உதவும் கூடியதொகை அரசிறையைச் செலவிட்டு இங்குள்ள பிள்ளைகள் கல்வி பயில்வதை இலவசமாக்கிவிட, "கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிகொண்டவாறு" அந்த இலவசக் கல்விமூலம் பாதிரிமார் இங்குள்ள மற்றை மார்க்கப் பிள்ளைகளைத் தஞ்சமயத்திற்கு இழுக்க விடுவது முறையாகுமா? இப்பாதிரிமார் செய்யும் அக்கிரமத்தைத் தடுப்பதற்குக் கல்வி மந்திரி முதலான அதிகார வர்க்கத்தினர் பாதுகாப்பான பிரமாணங்களைச் செய்தல் வேண்டும், மேலும் சைவாபிமானிகளென்றிருப்போ ரனைவரும், தங்களாலியன்ற பொருளைக் காலந்தோறும் மனப்பூர்வமாக வழங்கி இங்குள்ளசைவச்சிறுவர்,சிறுமியர் கல்வி பயிலும்கலாசாலைகளையெல்லாம் ஆயிரக் கணக்கான பிள்ளைகள் பயிலுதற்காகிய கலாசாலைகளாகவும், பன்னூற்றுக்கணக்கான பிள்ளைகள் தங்கியிருந்து படிக்கத்தக்க விடுதிகளோடு கூடிய சைவக் கல்லூரிகளாகவும் விரைவில் ஆக்குமாறு செய்தல் வேண்டும்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—9)

### "ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்"

புரோகிதர் விநாயகமூர்த்தியின் வீட்டிற்குப் போதலும், போனவரை விநாயகமூர்த்தி கண்டு, "சாமீ, வருக, வருக' என ஆசனமுதவி இருக்கச்செய்து இன்சொற் பேசிச் சுபம் விசாரித்து அதன்பின் "வந்த கருமம் என்னவோ" என்று விநயமாக வினவுதலும், "நாம் ஒரு மங்கல கருமத்தை யிட்டுப் பேசும்படி வந்தோம்" என்றார் மறையவர். "சொல்லுங்கள் சாமீ" என்றார் விநாயகமூர்த்தி: "வேறொன்றுமல்ல, உமது மருமகளுக்கு வறெங்கேனும் வரன்தேடி விவாகஞ் செய்துவைக்கும் நோக்கம் உங்களிடம் உண்டோ" என்று புரோகிதர் வினவுதலும், விநாயகமூர்த்தி கவலையோடு சிறிது யோசித்தார்; பின்னர் அவர் ஐயரைப்பார்த்து "சாமீ, என்செய்யலாம், ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்டொன்றாகும்" என்பர்: என்பிள்ளை இன்னவிடத்தில் இருக்கிறானென்பதைத்தானும் அறிய முடியவில்லை; அவ்வளவு மாத்திரமல்ல, ஐயா, எங்களுக்கு இப்பொழுது ஒரு மகன் இருக்கிறானே என்ற விஷயங்கூடச் சந்தேகத்திலிருக்கிறது......" என்று சொல்லுவதற்கிடையில் அவருடைய கண்களிலிருந்து நீர்த்துளி சிந்துதலும், புரோகிதர் அவருக்குத் தேறுதல் வார்த்தை சொல்லி ஒருவாறு அவரைத் தேற்றினார்; தேறிய விநாயகமூர்த்தி புரோகிதரைப் பார்த்து "சாமி, என் மருமகளை இன்னமுங் குமரிருக்க வைப்பது சரியல்ல; நான் பெறவிட்டாலும் அவளையும் என் பிள்ளைபோலப் பாவித்துத்தான் நடக்கிறேன்: ஆனதினால் அப்பெண்ணுக்கு எங்கள் மரபோடு ஒத்த மரபில் ஒரு வரனை எங்கேனும் விசாரித்து மணம்பேசிக் கூடிய சீக்கிரத்திற் கல்யாணஞ்செய்து வைக்கவேண்டு மென்பதுதான் எனது நோக்கம்; ஆனால் என் மருமகள் அதற்கு உடம்படுவாளோ என்பது சந்தேகம்; அவள் வாழ்க்கைப்படுகில் தன் மைத்துனனுக்கே யெனவும் இல்லையேல் இல்லறத்திற் புகுவதில்லையெனவும்பிடிவாதமாக நிற்கிறாளென்றும் அறிகிறேன்; ஆனதால் சாமி, என் சகோதரி உங்களுக்குப் புதியவளல்லள்: நீங்கள் தயவுசெய்து சகோதரி வீட்டிற்குப்போய், விஷயத்தைப் பேசுங்கள்; சகோதரியும் மகளும் சம்மதித்தாற் பின்பு வந்து எனக்குச் சொல்லுங்கள்; நான் என் சம்மதத்தை உடனே உங்களுக்குச் சொல்லுகிறேன்: சிரமத்தையிட்டுக் குறையெண்ணுதீர்கள்" என்றார் புரோகிதர் அதற்கு உடன்பட்டு உடனே விநாயகமூர்த்தியின் சகோதரிவீட்டிற்குப் போவாராயினர்

### "உண்மை தெய்வத்திற்குத்தான் தெரியும்"

புரோகிதர் வருதலும் தாயும் மகளும் அவரைப் பரிவுடன் வரவேற்று இன்சொற்கூறி ஆசனமுதவி இருக்கச்செய்தனர்; இருந்த புரோகிதர் அவ்விருவர்க்கும் ஆசி கூறியவண்ணம் விபூதி யுதவ, அவர்கள் விநயமாக இருகரத்தாலும் ஏற்றுப் பூசினர்; அதன்பின் மகளாகிய சிவபாக்கியம் தலைவாசலைவிட்டு வீட்டினுட் போக, தாய் மாத்திரம் அங்கு நிற்க, புரோகிதர் தாம் எண்ணிவந்த கருமத்தை வெளியிடுவாராயினர்; அவர் சிவபாக்கியத்தின் தாயைப்பார்த்து "தங்கைச்சி, உங்கள் மகளுடைய விவாக விஷயம் எவ்வளவில் நிற்கிறது? தகப்பனில்லாப்பிள்ளை; ஆனாலும் மாமனார் இருக்கிறாரென்பது மெய், இருந்தாலும் ஏதும் ஒரு முயற்சி செய்துகொண்டு விவாகத்திற்காகிய முயற்சி செய்யவேண்டும்: தகப்பனார் சீவந்தராயிருந்தாற்காரியமில்லை; அவரில்லாதபோது நீர் உம்முடைய தமயனருக்கு விஷயத்தைச் சொல்லி ஆகவேண்டிய கருமத்தைப் பார்க்கலாகுமே" என்றார்; புரோகிதர் இப்படிச்சொல்லக்கேட்ட கண்ணகியம்மை கவலையோடு கூடியவளாய், "சாமி, நீங்கள் குலகுரு; உங்களுக்கு ஒன்றையும் மறைத்துச் சொல்லவொண்ணாது; என் பிள்ளைக்கு என் அண்ணன் மகனையே சிறுபிராயந்தொட்டு நிச்சயித்திருந்தோம்; நாம் நினைத்தபடியெல்லாம் நடக்குமா; மலாய் நாட்டிற்குப் போன அந்தப் பிள்ளையின் கதி என்னவானதென்பதை நாங்கள் அறியலாமென ஆனமட்டும் முயற்சி பண்ணினோம்; அந்த ஊரிலிருக்கும் என் மகனும தன் மைத்துனனைப்பற்றி ஏதும் விசாரித்தறியலாமெனத் தன்னாற் கூடிய முயற்சிகளெல்லாஞ் செய்தும் இன்னமும் ஏதும் அறியமுடியவில்லையென்றுதான் தன் தங்கைக்குப் போனமாசம் எழுதின காகிதத்திற் கவலையோடு எழுதியிருக்கிறான்; அந்தப்பிள்ளையின் பெற்றார் என் பிள்ளைகள் நான் எல்லோரும் அந்தப்பிள்ளையையிட்டுக் கவலைப்படுகிறோம்; ஆனாலும் என்மகள் மாத்திரம் தன் மைத்துனனுக்கு எவ்வகையான மோசமும் நேராதென்று திடமாகச் சொல்லுகிறாள்; உண்மை தெய்வத்திற்குத்தான் தெரியும்; இந்த நிலைமையில் இருக்கும்போது நான் என் குமரைக் கரையேற்றுவதற்கு ஏதும் முயற்சி செய்வது சரியல்ல, சாமி; ஏதோ படைத்தவன் காப்பதற்கும் அறிவான்தானே" என்று கவலையோடு சொன்னாள்; "நீர் சொல்வது நிசந்தான்: ஆனாலும் நீடித்தகாலம் வீட்டிலே கன்னிகையை வைத்துக் கொண்டிருந்தால் உலகங் குறை சொல்லுந் தங்கைச்சி, அதையிட்டுத்தான் சொன்னேம்; அது கிடக்க, இந்த விஷயத்தில் உமது தமையனார் கருத்தென்ன?' என்று புரோகிதர் கேட்க, கண்ணகியம்மை, "சாமி, தம்முடைய மகனைப்பற்றி ஏதும் அறியமுடியவில்லையே என்ற கவலையிலும் பார்க்க, தம்முடையமருமகள் குமர் இருப்பதையிட்டுத்தான் என் அண்ணாவுக்கு அதிக கவலை; காலத்தைப் போக்காது வேறெங்கேனும் ஒருதக்க மாப்பிள்ளையைத் தேடி தம் மருமகளுக்குக் கல்யாணஞ்செய்துவைக்க வேண்டு மென்பதுதான் அவருடைய கருத்து" என்று கவலை கூரச் சொன்னாள்.

### போக்கு வாக்கு எப்படி?

"ஏன், தங்கைச்சி, நாம் உங்களுக்கு உண்மையைச் சொல்லிவிடுகிறோம்; வேறு எங்கேனும் உங்கள் மகளுக்கு விவாகஞ் செய்துவைக்கும் நோக்கம் உங்களிடத் துண்டென்றால், உங்கள் குடும்பப் புரோகிதர் என்ற முறையில் நாம் ஒரு மணமகனை விசாரித்துச் சொல்லலாமா என்று கேட்கும் நோக்கத்தோடு தான் இப்போது இங்கே வந்தோம்" என்றார்ஐயர்;"சாமி,நான்சம்மதித்தாலும், என தமையனார்தாம் சம்மதித்தாலும், எங்கள் மகள் வேறொருவரைக் கல்யாணஞ் செய்யச் சம்மதிப்பாளோ என்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்றாள் கண்ணகியம்மை; "அப்படியானால், நீர் பெற்ற தாய்தானே: பிள்ளையின் விருப்பத்தை மெல்ல உசாவிச்சொல்லலாமே" என்றார் புரோகிதர்; "சாமி, எங்கேனும் மணமகனை உத்தேசித்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறீர்களோ இல்லையேல் ஒரு மாப்பிள்ளையை இனிமேல் விசாரிக்கப் போகிறீர்களோ?" என்று கண்ணகி கேட்க, "விசாரிக்க

(தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# இணங்கி வருவாரா?

## ஜனுப் ஜின்னுவுக்குத் தலைவலி!

காயிதே அஸாம் ஜின்னு சாய்பு இன்று தலைவலி பிடித்துப் டலவித யோசனைகளில் ஆழ்ந்திருக்கிறார். பாஞ்சாலத்தில் சீக்கியரும் ஹிந்துக்களும் அவர் கட்டிய பாகிஸ்தான் கோட்டைக்கு வெடிகுண்டு வைத்துவிட்டனர். பிரிட்டிஷ் அதிகாரிகள் அவரைப் புறக்கணித்துவிட்டனர். பிரிட்டிஷ் பத்திரிகைகள் இவரின் விடாகண்டத்தனத்தைக் கண்டிக்கின்றன. நம்பியிருந்த சேர்ச்சில் துரையும், "அப்பா, நான்தான் என்னசெய்வது" என்று ஒப்பாரி சொல்லுகிறார். இந்த நிலைமையில் இந்திய மத்தியச் சட்டசபையில் வரவு செலவுத் திட்டம் அவருடைய கையாளான லியாகத் அலிகான் என்பவரால் எடுத்தாளப்பட்டிருக்கிறது. அது பல வகைகளிலும் நல்ல அம்சங்களைக் கொண்டிருந்தபோதிலும், கைத்தொழில் விருத்திக்குப் பங்கம் விளைக்கும் என்று கைத்தொழில் முதலாளிகள் கண்டிக்கிறார்கள். எனவே, அத்திட்டத்திலுள்ள குறைகளை மாற்றவேண்டும் என்று காங்கிரஸ் கேட்கும். அப்படிக் கேட்டால், அதற்கு இணங்கும்படி, ஜின்னு லியாகத் அலிகானுக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

●

### மிஞ்சினுல் கெஞ்சுவார்

இப்போதுள்ள நிலைமையில் தான் விரும்பிய பாகிஸ்தான் கிடைக்கமாட்டாது என்பதை உணரும் ஜின்னு இன்னும் சில தினங்களில் காங்கிரசுடன் சமரசம் பேச முன்வருவார் என்பதற்கான உற்பாதங்கள் தோன்றுகின்றன என்று "பிரீ இந்தியா" பத்திரிகையின் பம்பாய் நிருபர் தெரிவிக்கிறார் புதிய இராஜப்பிரதிநிதி மவுன்ற் பேற்றன் பிரபு வழவழாக் கருமங்களை ஆற்றாமல் ஜரூராகக் கருமம் ஆற்றத் தொடங்கினுல், "மிஞ்சினுல் கெஞ்சு" என்றபடி ஜின்னு வழிக்கு வருவார் என்பதே இந்திய நிலைமையை அவதானிப்பவரது எண்ணமாகும்.

●

### மிலேச்சத்தனம்

பண்டிதர் ஜவஹர்லால் பாஞ்சால நிலைமையைப் பார்வையிட்டபின் டெல்கிக்குத் திரும்பிவிட்டார். ஹிந்துக்களும் சீக்கியரும், முஸ்லிம் கிராதகரால் கொன்று குவிக்கப்பட்டுவிட்டதைப் பண்டிதர்கண்டு மனம் நொந்தார். அரசியல் அபிப்பிராயபேதம் காரணமாக இப்படி மிலேச்சத்தனமான கருமங்கள் புரிவதால் ஓர்போதும் லட்சியம் கைகூடாது என்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் அவர் கூறினர். இப்போது ராணுவத்தினர் ஜரூராகக் காவல் புரிகின்றனர். நிலைமை சீர்ப்பட்டு வருகிறது. இன்னுஞ் சில தினங்களில் நிலைமை முற்றாக அபிவிருத்தியடைந்துவிடும் எனப் பண்டிதர் நேரு எதிர்பார்க்கிறார்,

---

### ஓல்லாந்தரின் குள்ளத்தனம்

இந்தோனேஷியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதென்று ஓர் உடன்படிக்கை இற்றைக்குப் பல மாதங்களுக்குமுன் ஏற்பட்டது. ஆனல் அந்த உடன்படிக்கைக்கு உத்தியோகபூர்வமான கையொப்பமிட ஒல்லாந்த அரசாங்கம் இன்னும் தாமதித்து வருகிறன இதற்கிடையில் அது இப்போது கடற்கொள்ளையும் புரிந்துவருகிறது. இந்தோனேஷியாவில் இருந்து போகும் கப்பல்களைச் சோதித்து, அவற்றில் உள்ள பொருள்களைப் பறிமுதல் செய்து வருகிறது. இற்றைக்குச் சின்னுட்களுக்குமுன் ஓர் அமெரிக்க கப்பலையும் பிரிட்டிஷ் கப்பலையும் இப்படிக் கொள்ளையடித்தது. இது அமெரிக்கருக்கும் பிரிட்டிஷாருக்கும் ஆத்திரம் விளைத்திருக்கிறது. இந்தோனேஷியாவின் புறநாட்டு வர்த்தகத்தைக் கெடுக்கவே ஒல்லாந்த அரசாங்கம் இந்தச் சூழ்ச்சியை மேற்கொண்டிருக்கிறது.

---

### ஆசியாவில் அமெரிக்கர் சிரத்தை

இங்கிலாந்தின் ஏகாதிபத்தியம் குலையப்போகிறது. ஆசியா நாட்டில் அதன் செல்வாக்கு அழியப்போகிறது. ஆகவே அது வகித்திருந்த செல்வாக்கையும் அதிகாரத்தையும் அமெரிக்கா கைக்கொண்டுவிடுமா? என்றின்னோன்ன கேள்விகள் இப்போது பிறக்கின்றன. ஆசியாவில் அமெரிக்கர்க்கு ஏகாதிபத்திய ஆசையோ தம்செல்வாக்கை நிலைநாட்ட வேண்டுமென்ற ஆசையோ கிடையாது; ஆனல் ஆசியாவில் வசிக்கும் கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டுமென்பதே எங்கள் ஆவல் என்று ஓர் அமெரிக்கப் பிரமுகர் கூறுகிறார் சீனம் விஷயமாக அந்நிய நாட்டுமந்திரிகள் மகாநாட்டில் விவாதிக்கவேண்டும் என்று ருஷியா கேட்டதற்கு அமெரிக்கா மறுத்துவிட்டதும் இதனுலே தான் என்று கூறப்படுகிறது. ஆசியா மக்கள்விஷயத்தில் இனித்தலையிடுவதில்லை என்பதே அமெரிக்கர் நோக்கம். எதிர்காலத்தில் தன் வர்த்தகத்தைப் பெருக்கவேண்டுமானல் ஆசியா மக்களின் நேசபான்மையைச் சம்பாதிக்கும் விதத்தில அது நடக்கும்.

---

# அவரே கண்டார்!

## பொலிஸ் தலைவரின் அநுபவம்

இப்போது இலங்கைப் பொலிஸ் தலைவராகவுள்ள மிஸ்ரர் அலுவிகாரை இற்றைக்குச் சின்னுட்களுக்குமுன் ஓர் பொலிஸ் தானத்துக்கு விஜயம்செய்து, பொலிசார் எப்படி ஊரவரை மரியாதையாக நடத்துகின்றனர் என்பதைத் தம் கண்ணுரக்கண்டனராம்.

மிஸ்ரர் அலுவிகாரை குறித்த பொலிஸ் தானத்துக்கு முன் அறிவித்தலின்றி உத்தியோக உடை தரியாமற் சென்றார். அங்கே ஒருசில உத்தியோகத்தரும்பொலிசாரும் இருந்தனர். ஆனல் எவராவது ஏன்வந்தாய் என்று கேட்கவில்லை கொஞ்சநேரம் அங்குமிங்குமாய் அவர் உலாவிவிட்டுத் தான இன்னர் என்பதை அறிவித்தார். உடனே ஆசனங்களில் இருந்த பொலிசாரும், அதிகாரிகளும் தேள் கொட்டியவர்கள்போல எழுந்தனராம், சலாம் செய்தனராம்.

இந்த விஷயத்தைப் பொலிஸ் தலைவர் குறிப்பிட்டு ஓர் அறிக்கை எல்லாப் பொலிசாருக்கும் விடுத்திருக்கிறார். 'எனக்கு நடந்தவிதம்தான் பொலிஸ்தானங்களிற் கருமார்த்தமாகப் போகிறவர்களுக்கும் நடக்குமானல், பொலிசார்—ஊரவர் என்பவர்களுக்கிடையே எவ்வாறு ஒத்துழைப்பு ஏற்படமுடியும்? நாம் மரியாதைகாட்டினுல்தான் மற்றவர்களும் மரியாதை காட்டுவார்கள்." என்று பொலிஸ தலைவர் அவ்வறிக்கையிற் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்விஷயமாகப் பொலிஸ்விசாரணைச் சங்கம், பொலிஸ் பரிபாலனத்தைப்பற்றி எழுதியதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம். அச்சங்கத்தினர் தம் அறிக்கையிற் பின் வருமாறு கூறுகிறார்கள்:

'பொலிஸ்தானங்களுக்குக் கருமார்த்தமாகப் போகும் ஊரவாகளின் சௌகரியங்களைப்பற்றி அந்த ஸ்தானத்துப் பொலிசார் கவனிப்பதாகத் தெரியவில்லை பொலிஸ்தானம் என்றல் ஏதோ பரிசுத்தமான புனிதமான தெய்வீக ஸ்தலம்; அதிற் சாதாரண மனிதரை வரவிடுதலே பெரும் காரியமாகும்; எனவே, ஊரவர்கள் இவ்வளவுக்காவது தம்மை வரவிட்டார்களே என்று திருப்திகொண்டுஎன்ன வசதியீனம் நேர்ந்தாலும் அதனைப் பொருட்படுத்தக்கூடாது என்று பொலிசார் நினைக்கிறார்கள்போலும்."

---

# வள்ளுவர் வாய்மொழி

## எல்லார்க்கும் ஏற்ற இன்னமுதம்

வித்துவான், பண்டிதர் திரு கா. போ. இரத்தினம்
B. A. (Hons)B. O. L

(முற்றொடர்)

### அஹிம்சை

பிறர்க்கின்னு செய்யாமையே—அகிம்சையே-மகாத்மாகாந்தியடிகளுடைய அறநெறியாகும். அகிம்சைக்கு அடிப்படையாயிருப்பது அன்பே; அன்பின் குழந்தையே அகிம்சை எனலும் சாலும். காந்தியடிகளுடைய உயரிய கொள்கைகளும், சீரிய வாழ்வும் வள்ளுவர் வகுத்த அன்புநெறியிலே அமைந்து விளங்குகின்றன திருக்குறளுக்கு இப்பொழுது இலக்கியமாக விளங்குபவர் அடிகளார் என்பதனை யாவரும் ஏற்றுக் கொள்வர்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக்
கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

எனுங் குறளில் வள்ளுவர் புலப்படுத்தும் அகிம்சையின் மாண்பைக் கண்டு நாம் அற்புதமடையவேண்டியிருக்கிறது. அன்புக்கும் அகிம்சைக்கும் உரைகல் பகைவர்களே யாவர். பகைவர்களிடத்தும் அன்பு செய்தல்வேண்டும், அகிம்சையுடன் நடந்துகொள்ளல் வேண்டுமெனத் திருக்குறள் உரைக்கிறது. மகாத்மாகாந்தியடிகள் வங்காளத்திலுள்ள நவகாளிப்பகுதியிற் சுற்றுப்பிரயாணஞ் செய்து கொண்டிருக்கும்பொழுது அன்பரொருவர் என்னைக் கொல்லத் தீர்மானித்துவரும் ஒருவனை நான் முந்திக் கொல்வதா அன்றேல் அவனுற் கொல்லப்படுவதா நல்லது என அவரைக் கேட்டார். அதற்கு மகாத்மா "கொல்லப்படுவதுதான் பெருஞ்செயல்" என்று விடையிறுத்தார். இந்த விடை திருக்குறளில் இருக்கிறதென்பதை அவர் அறியின் மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளக் கூடும்.

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க
தான்பிறிதின்
இன்னுயிர் நீக்கும் வினை"

என்பது வள்ளுவர் வாய்மொழி. இஃது பேதையின் அல்லது கோழையின் செயலன்று: சிறந்த பேரறிஞன் செயல் என்பதையும் பின்வரும் குறளில் வள்ளுவர் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

"அறிவினுளெல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்."

ஒருவன் தமக்குத் தீமை செய்தால் அவனைத் தண்டித்தல் வேண்டும் என்று எண்ணுவது சாதாரண மக்கள் இயல்பு. "தன்னைக் கொல்லவரும் பசுவையுங் கொல்" என [illegible] [illegible] ஒருவன் [illegible] தீமையைப் பொறுக்கவேண்டும் எனக் கூறுபவர் மிகச் சிலரே. ஆனல் வள்ளுவரோ ஒருவன்செய்த தீமையை உடனே மறந்துவிட வேண்டுமென்றும், அவன் நாணத்தக்கதாகப் பெரிய நன்மையைச் செய்தே அவனைத் தண்டிக்கவேண்டுமென்றுங் கூறுவதை அறியும்பொழுது எவருடைய உள்ளமும் துள்ளிக் குதிக்குமன்றே!

"இன்னுசெய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்துவிடல்" என்பதும்,
"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று"

என்பதும் அவருடைய திருவாக்குக்கள். பிறர் தீமை செய்தாலும் அவர்களுக்கு நன்மை செய்கிறவர்களே பேரறிஞர்; இத்தகையரே சான்றோர்; சிறந்த நாகரிகம் நிறைந்தோர், எனவள்ளுவர் உள்ளங்கை நெல்லிக்கனிபோற் பல குறள்களில் கூறியிருக்கிறார்.

"அறிவினுல் ஆகுவதுண்டோ பிறிதின்
நோய்
தந்நோய்போற் போற்றாக்கடை"

எனவும்

'இன்னு செய்தார்க்கும் இனியவே
செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"? எனவும் சுடச்சுட வினவுகிறார்.

இனி இக்காலம் இரண்டாவது உலகப் பெரும்போர் முடிந்தகாலம்; பகைவர்களை அடக்கி உலகத்திலே சமாதானத்தை நிலை நிறுத்தப் பேரரசுகள் முயலும் சமயம்; இக்காலத்தில் உண்மையான அமைதியை உலகில் நிலைநாட்ட விரும்பின் வள்ளுவருடைய கூற்றின்படி நடந்தேதீர வேண்டும்.

"பண்புடையார்ப் பட்டுண்டுலகம்
அதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"
'கண்ணோட்டமெனுங் கழிபெருங்
காரிகை
உண்மையா னுண்டிவ்வுலகு"
'நண்பாற்றாராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றாதல் கடை"

எனும் அறிவுரைகளை இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷியா முதலிய வல்லரசுகள் மனத்திற் பதித்துக்கொண்டே தங்கள் கருமங்களை யாற்றவேண்டும். சமாதான உடன்படிக்கைகளிலும், நஷ்டஈடுபெறும் முறைகளிலும் பழம்பகைமையைப்பாராட்டித், தோற்றநாடுகளை ஒடுக்க முனைந்தால் உலகத்தில் ஒருபோதும் சமாதானம் நிலைத்திருக்காது. பகைவர்களிடத்தும் வெறுப்புக்காட்டாது அன்பு செலுத்தியவர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டுமென்பதை வெற்றியடைந்தோர் இனியாகுதல் தங்கடனுகக் கொள்வார்களாக

### வேலையின்மை

உலகப்போர்முடிந்தது; போர்த்தொழிலில் ஈடுபட்டிருந்த பலர் ஒருவகையான தொழிலையும் செய்ய முடியாது அலைகின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் உலகமெங்குமே தாண்டவமாடத் தொடங்கியிருக்கிறது. இத்திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு வள்ளுவர் கூறும் வழியைக் கேளுங்கள்.

"வேலையில்லையே என்று சோம்பித் திரிபவர்களைப் பார்த்து நிலம் எனும் பெண் சிரிக்கிறாள்" என நகைச்சுவை ததும்பக் கூறுகிறார். இந்தக் கோழைகள் நிலத்தைப் பண்படுத்திப் பயிரிட்டுச் சீவிக்கலாமன்றோ?

'இலமென்றசைஇ இருப்பாரைக்காணின்
நிலமெனும் நல்லாள் நகும்"

எனுஞ் செய்தியே இப்பொழுது எங்கும் பரம்பவேண்டியது, ஆகாயத்திலே பறந்தாலும், கடலுக்குள்ளே புகுந்து திரிந்தாலும், வேறெந்த அற்புதமான செயலைச் செய்தாலும் உயிருடன் வாழ்வதற்குப் பயிரிட்டே உணவைப் பெறல் வேண்டும். ஆகையால் உழவுத் தொழிலுக்குப் பணிந்தே உலகம் நடக்கவேண்டு மென்பதை நயமாக

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனுல்
உழந்தும் உழவே தலை'

எனுங் குறள் கூறுகிறது. நிற்க,

இவ்வுலகவாழ்வின் பயன் யாது? உயிருக்குக் கிடைக்கும் இலாபம் யாது? இவற்றை அடையவாழும் முறையாது? எனும் வினுக்களுக்குச் சமயநூல்களும் பிற அறநூல்களும் பலவகையான விடைகளைக் கூறி மக்களை மயங்கவைக்கின்றன, ஆனல் வள்ளுவரோ எட்டுச் சொற்களில் விடை தருகிறார்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியமில்லை உயிர்க்கு" என்கிறார்.

—வரும்.

---

"எல்லா மனிதர்களிடத்திலும் ஈசுவரன இருக்கிறார். ஆனல் ஈசுவரனிடத்தில் எல்லா மனிதர்களுமில்லை இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்குக் காரணம்".

"பெண்ணாசையும் பொன்னாசையும் உலக முழுவதையும் பாபத்தில் அமிழ்த்தி விட்டன. ஸ்திரீகளை லோக மாதாவின் தோற்றங்கள் என்று கருதுவாயானல், உலகுக்கு அவர்களால் துன்பமுண்டாகாது."

—ஸ்ரீ பகவான் ராமக்கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

வெள்ளி மார்ச் 21

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி எல் லக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்ய கோஷ்டி 8 30 எல் சாம்பசிவன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி எல் லக்ஷ்மி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 பி எல் லக்ஷ்மி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 டி வைத்தியநாதய்யர் பாட்டு 5-40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம கிராம நிகழ்ச்சிகள் 7 காஞ்சீபுரம் வி கங்காதரம்பிள்ளை நாகஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 குற்ற ஆராய்ச்சி சாதனங்கள் 8 டி வைத்தியநாத ஐயர் பாட்டு 8 30 காஞ்சீபுரம் வி கங்காதர பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகைஇசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 தந்தி இசை 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

சனி மார்ச் 22

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பிகே சுந்தரம் ஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 எஸ் பி தில்லைராஜன் பாட்டு 8-30 காலை இசை இசைத்தட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1 பி கே சுந்தரம் ஐயர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்கலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 சர்வகலாசாலைக் குறிப்பு 2-15 எஸ் பி தில்லைராஜன் பாட்டு 2.45 முடிவு.

மாலை 5 பி எல் சுப்புலக்ஷ்மி பாட்டு 5 40 திருமொழி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி எல் சுப்புலக்ஷ்மி பாட்டு 7-15 தோட்டக்கலை 7-30 தமிழில் செய்திகள் 7-45 டி கே பட்டம்மாள் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எஸ் ஜி கிட்டப்பா இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கோட்டுவாத்தியம் வயலின் 10 இசைவேளை 10 30 முடிவு.

ஞாயிறு மார்ச் 23

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பாலக்காடு கே வி நாராயணசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலைஇசை இசைத்தட்டு 8-30 ஆர் மீனாம்பாள் ராஜன் வீணை 9 முடிவு.

12 கதம்பம் 12-30 நாகரிக பலகணி 12 40 மோகினிவிலாசம் 12-45 மூணாறு அதிர்ஷ்டம் நாடகம் 12-55 புத்தி நிசை 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வீணை கோட்டுவாத்யம் 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 ஆர் மீனாம்பாள் ராஜன் வீணை 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 பாலக்காடு கே வி நாராயணசாமி பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7.45 திரைப்பட விமர்சனம் 8 எம் எம் நடராஜபிள்ளை புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கே வி காளிதாஸ் பாட்டு 10 இசைவேளை 10.30 முடிவு.

திங்கள் மார்ச் 24

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 பி வேணுகோபால பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் 8-30 கோமதி சங்கரநாராயணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே எஸ் பத்மினி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கே எஸ் பத்மினி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 பி வேணுகோபால் பிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 நாகர் கோயில் கே மகாதேவன் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 தொண்டுக்கலை 8 கோமதி சங்கர நாராயணன் பாட்டு 8-30 நாகர்கோயில் கே மஹாதேவன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 குறவஞ்சி பாடல்கள் 10 இசைவேளை 10-30 முடிவு.

செவ்வாய் மார்ச் 25

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 வி ஏ சாம்பசிவன்பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை இசைத்தட்டு 8-30 வைதேகி ராஜகோபாலன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வி ஏ சாம்பசிவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 வி ஏ சாம்பசிவன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 245 முடிவு

மாலை 5 வைதேகி ராஜகோபாலன் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 தமிழில் செய்திகள் 7.45 செம்பை வைத்தியநாத பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வீணை தில்ருபா 10 நீங்கள் [illegible] இசைத் தட்டு 10.30 முடிவு.

# செய்தித் திரட்டு

ஆசியா மகாநாட்டின் இலங்கைப் பிரதிநிதிகள் இன்று புதுடெல்கிக்குப் பிரயாணமாகின்றனர்.

* *

பொலனறுவையிற் பேதிநோயின் உக்கிரம் இன்னும் குறைந்தபாடில்லை. இதுவரை 22 பேர் இறந்தனர் என்று தெரிகிறது.

* *

நீர்கொழும்பு விமான நிலையத்தை விட்டுச் சிங்கப்பூர்க்குச் சென்ற ஓர் விமானம் 2 மைல் கடந்ததும், விபத்துக்குள்ளாகி மரங்களுடன் மோதியதால்; அவ்விமானத்துக்குள் இருந்த 11 பேர் மரணமடைந்தனர். இது நிகழ்ந்தது சென்ற புதன்கிழமை அதிகாலையில்.

* *

கடந்தமகாயுத்தத்தில் மகத்தானசேவை புரிந்த மூன்று பாரிய பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் இப்போது இந்தியாவின் உபயோகத்துக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

* *

அவசிய சேவைத் தொழிலாளராயுள்ள துறைமுக வேலையாட்களை வேலைநிறுத்தம் செய்யும்படி தூண்டினார் என்று டக்டர் என் எம்.பெரீராமீது தொடரப்பட்ட வழக்கில், எதிரி நிரபராதியெனக் கண்டு விடுதலை செய்யப்பட்டார்,

* *

காங்கிரஸ் தலைவராகிய ஆச்சார்ய கிருபாலினி கொச்சி சமஸ்தானத்துக்கு விஜயம் செய்தபோது, மகாராஜா காங்கிரஸ் நிதியின்பொருட்டு 30000 ரூபாகொண்ட பணமுடிப்பு ஒன்று உதவி காங்கிரஸதலைவரை உபசரித்தார்.

## தேவை

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிச் சைவவித்தியாசாலைக்கு தமிழ் ஆசிரிய தராதரம் பெற்ற ஆசிரியர் ஒருவர் ஆங்கில (Matric) அறிவுடன்தேவை, 31-3-47 க்குப் பிந்தாமல், மனேஜர், சிறுப்பிட்டி சைவவித்தியாசாலை, புத்தூர் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

மனேஜர்

சி. சை. வித்தியாசாலை

15—3—47

Mis 354 18—21-3-47

## பராகுவேக் கலகம்

தென் அமெரிக்காக்கண்டத்தில் உள்ள "குட்டி"ராச்சியங்களில் ஒன்றுபாராகுவே. இது இலங்கையிலும் பார்க்க இருமடங்கு பெரியது. ஆனல் குடிசனத் தொகையில் இலங்கைக் குடிசனத்தில் 6 இல் 1 பங்கு தான் உடையது. மழை, பனி என்பன வருஷத்தின் ஓர்பகுதியில் எப்படிச்சாதாரணமோ, அப்படியே உள்நாட்டுக் கலகங்களும் இந்தப் பாராகுவே இராச்சியத்திற் சர்வ சாதாரணம். இப்போது அங்கேயுள்ள ஆட்சியைக் கவிழ்க்கச் சதிகாரா கலகம் கிளப்பியிருக்கிறார்கள். அதன் பயனாக, வயதுவந்த சகலரும் ராணுவத்திற் சேரவேண்டும் என அந்நாட்டு அரசாங்கம் ஓர் சட்டத்தை இப்போது உண்டாக்கியிருக்கிறது.

# Commission Sale

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையிலுள்ள
யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

1 வல்வெட்டித்துறை இராமசாமி வயித்திலிங்கமும்
2 பெண் பொன்னம்பிகையும்

வழக்காளிகள்

இல. 2506 P.

1 ஏரம்பமூர்த்தி சுப்பிரமணியம் புலோலி மேற்கு பருத்தித்துறை
2 மேற்படியூர் சுப்பிரமணியம் மகள் மங்கையற்கரசி அம்மாள்
3 அனுராசபுரம் பொன்னையா கணபதிப்பிள்ளையும்
4 பெண் சிவகாமிப்பிள்ளையும்
5 புலோலிகிழக்கு C. கணபதிப்பிள்ளை
6 C. K. இராசதுரை எபனி லேன் நெம்பர் 8. திருகோணமலை
7 அல்வாய் வடக்கு M. J. சுப்பிரமணியம்

எதிரிகள்

மேற்கூறிய இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1947-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் பின்னல் விபரிக்கப்படும் ஆதனங்கள் மதிப்புத் தொகையிலிருந்து முதலாவதாகப் பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத் தவறினல் உடனே அந்த இடத்திலேயே பிரசித்த ஏலத்திலும் என்னல் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று புலோலிமேற்கு வெங்றி பாகுதேவன் குறிச்சி எதிர் ஒல்லை நிலப்பரப்பு 4 குளி 10 2/12. இது உலாந்தா மேஸ்தர் க. வேல்முருகு அவர்களால் 1946-ம் ஆண்டு மாசி மாதம் 21 ம் திகதி 2343 ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு இந்த வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் படத்தில் காட்டப்பட்ட ஆதனம். எல்லை கிழக்கும் வடக்கும் ஏரம்பமூர்த்தி சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு வாரி ஆழ்வானுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு நாகன் சங்கரனுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம்,

ஆதனமதிப்பு ரூபா 1082-64.

2 ஷையிறை எதிர் ஒல்லை நிலப்பரப்பு 3 குளி 10 32/16. இது உலாந்தா மேஸ்தர் க. வேல்முருகு அவர்களால் 1946-ம் ஆண்டு மாசி மாதம் 21 ம் திகதி 2344 ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு இந்த வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் படத்தில் காட்டப்பட்ட ஆதனம் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு வாரி ஆழ்வானுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு ஏரம்பமூர்த்தி சுப்பிரமணியத்துக்கும் மறு பேருக்குமுரிய வாதனம்.

ஆதனமதிப்பு ரூபா 1223-34

வீ. முதலியார் குழந்தைவேலு
கொமிஷனர்.

பருத்தித்துறை
15—3—47.

Mis 359 21—3—47

# Commission Sale

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையிலுள்ள
யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

1 வல்வெட்டித்துறை இராமசாமி வயித்திலிங்கமும்
2 பெண் பொன்னம்பிகை

வழக்காளிகள்

இல. 2530 P.

1 புலோலி மேற்கு ஏரம்பமூர்த்தி சுப்பிரமணியம்
2 ஷை யூர் சுப்பிரமணியம் மகள் மங்கயற்கரசிஅம்மா
3 அனுராசபுரம் பொன்னையா கணபதிப்பிள்ளையும்
4 பெண் சிவகாமிப்பிள்ளையும்
5 புலோலி கிழக்கு C. கணபதிப்பிள்ளை
6 புலோலி கிழக்கு ஆறுமுகம் விஞசித்தம்பி
7 காவி அம்பிகவாகர்கணபதிப்பிள்ளை
8 புளியங்குளம் அம்பிகவாகர் சபாரத்தினம்.

எதிரிகள்

மேற்கூறிய இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1947-ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் பின்னல் விபரிக்கப்படும ஆதனம் மதிப்புத் தொகையிலிருந்து முதலாவதாகப் பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத் தவறினல் உடனே அந்த இடத்திலேயே பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று புலோலி மேற்கு வென்றி பாகுதேவன் குறிச்சி எதிர்ஒல்லை நிலப்பரப்பு 2 குளி 2 32/10. இது உலாந்தா மேஸ்தர் க. வேல்முருகு அவர்களால் 1946-ம் ஆண்டு மாசி மாதம் 21 ந் திகதி 2346-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு இந்த வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் படத்தில காட்டப்பட்ட ஆதனம். இதற்குள் இருக்கும் குறிக்கப்பட்ட படத்தில் A. B. என்னும் அடையாளம் போடப்பட்ட குடிசைகளும், மற்றவைகளும் உட்பட எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு ஏரம்பமூர்த்தி சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு சுப்பிரமணியம் கதிரவேலுவுக்குரிய ஆதனம்.

ஆதனமதிப்பு ரூபா 484 27

வீ. முதலியார் குழந்தைவேலு
கொமிஷனர்.

பருத்தித்துறை
15—3—47.

Mis 358 21—3—47

## ஐக்கிய தேசீயக் கட்சிக் கூட்டம்

ஐக்கிய தேசியக்கட்சிக் காதரவு சேர்க்குமபொருட்டு அக்கட்சியின் கொள்கைகளையும் நோக்கங்களையும் விளக்கும் பொதுக்கூட்டம் ஒன்று இன்று (21-3 47) வெள்ளிக்கிழமை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நசரசங்கத் தலைவர் ஸ்ரீ க. பொன்னம்பலம் தலைமையிற் கூடும் என்று அறிகிறோம்.

கடிதம்

## வெள்ளப் பெருக்கும் கமக்காரர் நிலைமையும்

மூல்லைத்தீவிலும் அதன் அயற்கிராமங்களிலும் கடந்த மூன்று வாரங்களாக இடையிடையே வருஷித்த பெருமழை அநேக குளங்களின்கரைகளை உடைத்து வெள்ளப் பெருக்கை உண்டாக்கியது. வயல்களை மூடிப் பெருகிய வெள்ளத்தினல் அறுவடை செய்யப்பட்ட உப்பட்டிகளும் நெற்போர்களும் வாரிச்செல்லப்பட்டன. அறுவடை செய்யப்படாதிருந்த வயல்களிலுள்ள நெற்கதிர்கள் நீருள் அமிழ்ந்து யாவும் முளைக்கத் தொடங்கிவிட்டன.

இன்னும் வேளாண்மைத் தொழிலுக்கு உதவியாய் உள்ள கால்நடைகளும் அநேகம் நீருள் அமிழ்ந்தி மாண்டன.

இதனல் இவ்வூர்க் கமக்காரருக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அரசினருக்குக்கொடுக்கவேண்டியதிறை நெல்லைக் கொடுக்க வழியற்றவர்களாயும் தம் குடும்ப சம்ரக்ஷணை செய்யக் சதியற்றவர்களாயும் துயருறுகின்றனர்.

ஆதலால் அரசினர் இப்பகுதிக் கமக்காரருக்கு இத்தருணத்தில்நட்டநிவாரணம் அளித்து உதவிபுரிதல் இன்றியமையாததாகும்.

வ. நமசிவாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டியதில்லை; தக்க குடும்பத்தைச்சேர்ந்த ஒருவர்தாம் தமக்காக உங்கள் பெண்ணுக்குக் கல்யாணம் பேசும்படி எம்மைக் கேட்டார்; அதனால் இப்போது இங்கே வந்தோம்" என்றார் புரோகிதர். "அவர் ஆர்? எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்? சமீபத்திலோ, தூரத்திலோ அவர் இருப்பது? உத்தியோகமென்ன? குணம், நடை போக்குவாக்கு எப்படி? அவர் பெயரை நாங்கள் அறியலாமா? இவைகளையெல்லாம் சொன்ன பிறகுதானே, சாமி, எங்களுக்கு ஏற்ற சம்பந்தமெனக் கண்டால், என் மகளுடன் நான் ஏதும் பேசலாம்" என்றாள் கண்ணகியம்மை; கண்ணகியம்மை இப்படிச் சொல்லக்கேட்ட ஐயர் "நீர்கேட்பவை நியாயமானவைதாம்; அவர் இவ்வூரிலேதாம் வசிப்பவர்; மலாய்நாட்டுப் பகுதியில் உத்தியோகமாயிருந்தவர்; இப்பொழுது விவாகஞ்செய்துகொண்டு மீண்டு உத்தியோகத்தானத்திற்குக் குடும்பத்துடன் போகலாமென்ற நோக்கத்தோடுதான் இங்கே வந்திருக்கிறார்; அவரிடத்திற் போதிய பொருள்பண்டம் நிலம்புலம் எல்லாமுண்டு; நடைபோக்கு வாக்கு என்னுமிவைகள் நாம் அறிந்தவரையிற் குற்றமில்லையென்று சொல்லலாம்; பெயர் விஜயரத்தினம், நீடித்தகாலம் தூரதேசத்திலே யுத்தியோகம் பார்த்தமையினாலும், இந்தவூரில் அவர் அதிகஞ்சஞ்சரியாமையினாலும், அவரைச்சிலர் அறிவரேயொழியப்பலர் அறியாரென்றெண்ணுகிறோம்" எனவிடைகூறினார்புரோகிதர். கேட்ட கண்ணகியம்மை "சாமி, நீங்கள் சொல்லும் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனால் ஆளை நேரில் அறியேன்; அவர்களைப்பற்றிய வரலாறு முழுவதையும் என் அண்ணா அறிந்திருத்தலுங் கூடும்; அவைகளை அண்ணாமூலமாக அறிந்துகொள்ளுகிறேன்; ஆனால் இன்னும் இரண்டொரு விபரத்தையறிய விரும்புகிறேன்; கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள்; தழாவிக் காய்ச்சாத கூழும் உசாவிக் கட்டாத கல்யாணமும் நன்மையாகா என்று நாங்கள் பெண்கள் சொல்லும் பழமொழியுண்டல்லவா; மாப்பிள்ளைக்கு வயசென்ன? இப்போதுதான் கல்யாணஞ் செய்யப்போகின்றாரா? இல்லையேல் முன்னருந் தாரங்கொண்டவரா? சுத்தபோசன முடையவரா? குடிவெறி யில்லாதவரா? தெய்வங் கொள்கை, கடவுள் வழிபாடு, சமயக் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவரா? அறிவேறப் படித்தவரா? தானதருமம் இன்சொல் பெரியோரைப் பேணுங் குணம் முதலியன பூண்டவரா? இவைகளைப்பற்றியும் அறிந்துகொண்டு அதன்பின் இந்தக் கருமமாக ஏதும் முயற்சி செய்வது நல்லதென்று நினைக்கிறேன் சாமி" என்றாள்: "நீர் கேட்பது நியாயமானது; அந்த மாப்பிள்ளையின் வயசு முப்பத்தைந்திற்கும் நாற்பதுக்குமிடையிலிருக்குமென மதிக்கலாம்; அரோகதிட காத்திரமுள்ள ஆள்; முந்தியொரு தாரங் கொண்டதெனவும், அந்தப்பெண் மணம்முடித்துச் சிலவருடஞ் செல்வதற்கிடையிற் பிரசவகாலத்திலே குழந்தையோடு மோசம் போய்விட்டாளெனவும் அந்த விஜயரத்தினமென்பவரே எமக்குச் சொன்னார்; மற்றை வரலாறுகளை நாம் நுட்பமாயறியோம்; அறியவேண்டுமானால் அந்த அயலிலே மெல்லக் கேட்டறிந்துவந்து உங்களுக்குச் சொல்லலாம்; அதன் பின்னர் நீங்கள் உங்கள் விருப்பப்படி செய்துகொள்ளலாம். ஆனால், தங்கைச்சி உங்கள் மகள் வேறு மாப்பிள்ளையை மணக்கச் சம்மதித்தாற்றானே, நாம் அந்த விஷயங்களைப் பற்றி உசாவியறியலாம்; இல்லாவிட்டாற் பயனென்ன" என்றார் புரோகிதர்.

"கிட்டாதாயின் வெட்டென மற"

"ஓம், சாமி, நீங்கள் சொல்வது நிசமானது; நீங்களும் ஐந்து குரவருள் ஒருவராதலின், பிள்ளை தன் பிதாவிற்குச் சொல்வதுபோல் எங்கள் மகள் தன்னுடைய எண்ணத்தைக் கூசாமல் உங்களுக்குஞ் சொல்லுவாளென்று நினைக்கிறேன்; பிள்ளையை நான் இங்கே அழைக்கிறேன்; அவளுடைய நோக்கத்தைக் கேட்டறியுங்கள் சாமி" என்று கண்ணகியம்மைசொல்லுதலும் ஐயர் அதற்கு உடன்பட, தாய் உள்ளேபோய் உடனே மகளைத் தலைவாசற்பக்கம் கூட்டிக்கொண்டு வந்தாள்; வந்து விநயமாக ஒதுங்கநின்ற சிவபாக்கியத்தைப் புரோகிதர் ஆதரவுடன் பார்த்து "மகளே, எம்பிள்ளை வேறு நீர் வேறல்லீர்; நாம் உங்களகுலப்புரோகிதர்: உமது தாயார் உம்மிடஞ் சில விஷயத்தை நேரிற் கேட்டறியும்படி எமக்குச் சொன்னதால் இங்கே உம்மை வரச்செய்தேம்; விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறோம்; உமக்கு உமது மைத்துனரையன்றி வேறொரு வரனை விவாகஞ்செய்ய நோக்கமுண்டோ?

சிவபாக்கியம்: இல்லை, சாமி,

புரோகிதர்: உமது மைத்துனரை நீர் விவாகஞ்செய்ய வெண்ணுதென்றல்ல; அப்படிக் கைகூடினால் எல்லாருக்கும் மகாசந்தோஷமாயிருக்கும்; அவரைக்கூட்டிவைக்க ஆண்டவன் திருவருள் கைகூடாதபட்சத்தில், செய்யலாந்தானே குழந்தாய்;

சிவபா: செய்யலாம, செய்யாமல் விடலாம்: அது அவரவர் உள்ளக் கருத்தைப் பொறுத்தது சாமீ, ஆனால் ஆண்டவன் திருவருள் கைகூடாதென்று நாங்கள் எப்படியறிவோம் சாமி?

புரோ, ஆம். மகளே, அவனருளை நாம் அறியமுடியாதுதான்: ஏன் விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லுகிறோம். உமது மைத்துனருடைய சம்பந்தம் உமக்கு நிறைவேறாதபட்சத்து, வேறுவிவாகம் பேசிச் செய்தற்கு நீர் உடம்படுவீரோ என்பதைத்தான் அறிய விரும்புகிறோம்.

சிவபா: உடம்படமாட்டேன்.

புரோ: ஏன் மகளே, அப்படிச் சொல்லுகிறீர்? உடம்பட்டாலென்ன.

சிவபா: அது என் நியதி.

புரோ: (கண்ணகி உம்மையைப் பார்த்து) அப்படியானால் நாம் பிள்ளையை நியாயங் கேட்கவுமொண்ணாது; வேறு விவாகஞ் செய்யும்படி நெருக்கவுமொண்ணாது. என்று கூறி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு மீண்டார். மீண்டவர் அடுத்த நாட் பிற்பகல் விஜயரத்தினத்தின் வீட்டிற்குப் போய், அதிகஞ் சொல்லாமல், "தம்பி, அந்தப்பெண்ணை நாம் நேரிற் கேட்டோம்; அக்கன்னிகை தன் மைத்துனனையன்றிவேறு எவரையும் விவாகஞ் செய்வதில்லையென்ற மனத்திடங்கொண்டிருக்கிறாள்; ஆனதால் அதிற் பிரவேசிப்பதிற் பயனில்லை; கிட்டாதாயின் வெட்டென மற என்றபடி, அந்தப்பேச்சை விடுத்து வேறெங்கேனும் உமக்குப்பெண் விசாரிக்கும்படி நீர் கேட்டால் நாம் ஆநந்தமாக ஒழுங்கு செய்யச் சித்தமாயிருக்கிறோமென்றார். (வரும்)

## பஞ்சாட்சர விளக்கம்

....இறைமணி....

[14-3-47 வெளியீட்டில் இந்நூலின் முற்பாதி வெளிவந்தது. மிகுதியான ஆறுபாடல்களும் இன்று தரப்படுகின்றன. அவற்றைப்பற்றி யாதும் கூறுது வாசகர்களே படித்தறிய விட்டுவிடுகிறேன்.]

வயநமசியென்ற திருமந்திரத்தை வள
மாக [illegible]
அயனெடுமால்காணு தேவதேவன்

அமலனவனருள் கிடைக்குமாறுதார
பயன்பெருகும் வாலைநடம்காணலாகும்
பகர்ந்தமொழி சாதமிது பாருள்ளோர்க்கு
மயலூட்டும் நெடுமாயம் தீர்ப்பாலையா
மன்றில்நடம்நின்று நிதம்புரியும் தேவே.

யநமசிவவென்றுரைத்து மூச்சடக்கி
யானைபுலிகரடியென்ன மீறிநிற்கும்
மனத்தினிலேயுள்ள மும்மலத்தினோடு
மண் பெண் பொன்னாசையையும் நீக்கி
விட்டால்
கனமேதுதினமிந்தக் காசினியில் கறைக்
கண்டனருள் கிடைக்கும் மறுமையிலும்
சனனபெருஞ்சமுத்திரத்தைக் கடப்பா
ரையாசங்கராநின்கிருபைத்தந்தாள்தேவே

சாற்றியஇம்மந்திரத்தைச் செபிப்பதற்குத்
தங்கத்தின்தகடொன்று தேடிக்கொண்டு
கீற்றுகஆறுவரை நேரேகீறிவைத்துக்
கீழ்மேலாயாறுவரை தெரியக்கீறின்
தோற்றுமே யறுநான்குமொன்றுங் கூடித்
தொடர்பான வீட்டினது தோற்றமையா
ஏற்றியேயதனுள்ளே எழுத்துயாவும்இலக்
கங்களன்பத்தொன்றும் அமைப்பர்தேவே.

எழுதியேபீசமது எழுதியாங்கு எற்ற
வொருபூசை நைவேத்தியமுஞ் செய்து
பழுதறவேயொவ்வொன்றும்லட்சமோதப்
பாருலகிற் சித்தர்களாய்த்திரிவாரென்றும்
முழுதாகவிவையற்ற வறியேனையா
மூடன் யானுன்பாதம் நம்பிவந்தேன்
மழலைமொழியுமையவளோ டெழுந்து
வந்து வரமருளியிருவினையும் மாற்றும்
தேவே

குருவினையே துணைக்கொண்டு தீட்சை
பெற்றுகூடியதோர்நிஷ்டையினில்
நின்றேபற்ற
அருவுருவாயமர்ந்தபரஞ்சோதிநாதன்
அமலனருள்வடிவனம்மையுமைபாகன்
இருவினையும்நீக்கிவீடருளும்ஞானவீச
னருள்பெருகிவருமென்றேயாதிமுதற்
கருமநெறிமறையெல்லாஞ்சாற்றுமையா
கண்ணுதலேதண்ணளியேஈவாய்தேவே.

ஐந்தெழுத்தேயிட்டசித்தி யெய்துவிக்கும்
ஐந்தெழுத்தேமாயவலைப்பந்தம்நீக்கும்
ஐந்தெழுத்தேயிடர்களையும் துன்பம்போக்
கும்ஐந்தெழுத்தே பசுபதியினருளைச்
சேர்க்கும்
ஐந்தெழுத்தேவேதமுதற் பொருளுமாகும்
ஐந்தெழுத்தேயண்டத்தின்தோற்றமாகும்
ஐந்தெழுத்தேயானபரஞ்சோதிநாதா
அம்பையுடன்விடைமீதில்வந்தாள்தேவே.

## காரைநகர்ச் சைவமகாசபை

இம் மகாசபையின் 31ம் ஆண்டு நிறைவு விழா நிகழும் விய ஆண்டு பங்குனித்திங்கள் 24௳ (6-4-47 [illegible]மை முற்பகல் 9மணிக் [illegible] சபைமண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அவ்வமயம் சென்ற ஆண்டில் நடைபெற்ற சபை அலுவல்கள், வரவு செலவுக் கணக்குகள் முதலிய அறிக்கைகள் வெளியிடப்படுவதும், சபைக்குரிய சட்டங்கள் அமைத்தலும், அலுவலுறுப்பினரைத் தெரிதலும் நடைபெறும்.

பிற்பகல் பல அறிஞர்கள் சிறந்த சொற்பொழிவுகள் செய்வார்கள்.

# குறிப்புக்கள்

### புதிய கல்வித்திட்டம்

கல்வி மந்திரி கன்னங்கராவின் புதிய கல்வித் திட்டத்துக்கு எதிர்ப்பு வரவர அதிகமாகி வருகின்றது. அரசாங்கசபையின் காலவெல்லை முடிந்து, புதிய பாராளுமன்றத் தேர்தல் சமீபிக்குங்கால், இந்த எதிர்ப்பு இன்னும் அதிகமாகும் என்று எவரும் எதிர்பார்க்கலாம். இந்தத் திட்டத்துக்குப் பிரதான எதிர்ப்பாளர்கள் கிறீஸ்துவ பாடசாலையதிபர்கள் என்பதனையும், அக்கிறிஸ்துவர்களுக்கிடையே பல காரணங்களினால் ஒற்றுமை யதிகம் உண்டென்பதனையும் அந்த ஒற்றுமை மூலமாக இன்று அரசாங்கசபையில் பதவி வகித்திருப்பவர்கள் மீண்டும் அபேட்சகராக வருங் காலத்தில், அவர்கள் வெற்றியை ஆக்கவும் அழிக்கவும் ஓரளவுக்குச் சில தொகுதிகளில் முடியும் என்பதனையும் நாம் ஞாபகப்படுத்துவோமானால், இன்று இத்திட்டத்துக்கு விரோதமாக நிற்பவர்களின் நிலைமையை அறியலாம்; ஆனால் இலவசக் கல்வித்திட்டத்தையும், ஏனைய சிறந்த அம்சங்களையும் கொண்டுள்ள இக்கல்வித் திட்டத்துக்கு எதிராக நிற்பவர்கள் எமது ஹிந்து சமூகத்தின் நண்பர்களல்ல என்பதைமாத்திரம் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்;

### ஸ்ரீஜாத் பிரகாசம்

தமிழ்நாட்டின் ஒப்புயர்வற்ற தலைவர் ராஜாஜி பிரதம மந்திரியாக வராமல் தடுத்து, அதன் பயனாக, காங்கிரஸ் அதிகார பீடத்தின் ஆணையையும் மீறிய ஸ்ரீஜாத் பிரகாசம் இன்று தம பிரதம மந்திரப் பதவியைத் துறந்துவிட்டார். தேசாபிமானத்தில், தியாக சிந்தையில், ஆந்திர கேசரி ஸ்ரீஜாத் பிரகாசம் மற்றெவருக்கும் இளைத்தவரல்ல என்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால் மது போன்ற அதிகார மோகம் அவரை விடவில்லை. தமிழர், ஆந்திரர் என்ற பிரச்சினையைக் கிளப்பி, அவர் பிரதம மந்திரியானார். காந்தியடிகளினதும் காங்கிரஸ் அதிகார பீடத்தின் ஆதரவையும், அபிமானத்தையும் பெறுதற்காகப் பல சட்டங்களை அவசர அவசரமாக இயற்றினர். ஆனால் அவை ஈற்றில் அவருக்கே நட்டமாக விளைந்து, ஏற்கெனவே இருந்த அதிருப்தியை அதிகரித்து, காங்கிரஸ் சட்டசபையினர் கொண்டிருந்த அபிமானத்தைக் குறைத்துவிட்டன. நடந்தது நடந்துவிட்டது. ஸ்ரீஜாத் பிரகாசம் இப்போதாவது தம் நிலையை உணர்ந்து பதவியை விட்டு விலகிவிட்டார். இனியாவது சென்னைக் காங்கிரஸ் வாதிகள் பூரண ஒற்றுமைகொள்ளுவாராக. பாகிஸ்தான் என்ற பைசாசம் எட்டிப்பார்க்கிறது. ஹிந்துக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டுள்ள இந்திய மாகாணங்கள் இமைகொட்டாமல்விழிப்புடனிருக்க வேண்டும். சென்னை வழிகாட்டுமாக.

## தேகவியோகம்

ஆதிமுதலில் சோடாக் கொம்பனியை உற்பத்தியாக்கியவரும், தன்னலங்கருதாது பிறருக்கு உழைத்தவரும் (ஸ்ரேசன் சந்தி ஐக்கிய பண்டசாலையை ஸ்தாபித்து அதில் பொக்ஷாதிபதியாகக் கடமையாற்றியவரும் சைவசமயத்தில் மிகவும் பற்றுள்ளவரும், சாமி பொன்னம்பலம் டாக்டர் இராமலிங்கம் ஆகியோருக்குத் தமையனாகவும், மலாய் நாட்டிலிருந்து திரும்பி வியாபாரக் கிளையை விருப்புடன் நடத்தினவராகிய நாகமுத்து துரையப்பா 7-3-47 பகல் $12\frac{1}{2}$ மணிக்கு தமது 59ம் வயசில் தமது இல்லத்தில் தேகவியோகமாயினர். இவருடைய ஈமக் கிரிகைகள் இவர் மருகரால் நடத்தப்பெற்றது.

(Mis. 362—25-3-47

### தானவரவு

ஷெயாரின் அபரக்கிரியையின் போது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்குத் தானமாக வரித்தனுப்பியரூபா 5 பெற்றும்.—மனேஜர்.

## தேகவியோகம்

### ஸ்ரீ கு. நவரத்தினம்

நவாலி விதானையாகப் பலகாலம் திறமையுடன் கடமையாற்றி, உபகாரவேதனம் பெற்று வந்தவராகிய ஸ்ரீ குட்டித்தம்பி நவரத்தினம் சென்ற 15-3-47 சனிக்கிழமை, காத்திராப்பிரகாரம் ஏற்பட்ட சடுதி வியாதியால் தேகவியோகமாயினர். காலஞ்சென்றவர் இன்சொல், ஈகை முதலாம் சுகுணங்கள் அமையப்பெற்று எவர்க்கும் இனியராய்த் தம் கடமையைத் திறம்பட நடத்திவந்தவராவர். இவரைப் பிரிந்து துன்புறும் சுற்றமித்திராதியோருடன் யாமும் அநுதாபமுறுகின்றோம். இவரது ஆன்மா சாந்தியடைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமதர்மிகள்!

## பண்டாரநாயக்கா சிலைக்குப் பூச்சு

இப்போது ஸ்தலஸ்தாபனப்பகுதி மந்திரியாயுள்ள மிஸ்ரர் S.W,R.D. பண்டாரநாயக்காவின் தந்தையாராகிய காலஞ்சென்ற சேர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்காவின் உருவச்சிலை கொழும்புப் பகிரங்கமான இடம் ஒன்றில் இருக்கிறது.

சென்ற சனிக்கிழமை யாரோ சிலர், அந்த உருவச்சிலைக்குச் செந்நிறமான வர்ணத்தைப் பூசி அதில் சமமட்டியும் சத்தகமும் போன்ற படங்களை (இவைதான் சமதர்மிகளின் சின்னங்கள்)ப் பொறித்து, அருவருப்பான சில வார்த்தைகளையும் எழுதிவிட்டார்களாம். சமதர்மிகள் அல்லது அவர்கள்மீது அநுதாபம் கொண்டவர்களின் வேலை இதுவென்று சந்தேகிக்கப்படுகிறது.

## ஸ்ரீ ராமக்கிருஷ்ண சங்கம் பொன்விழா

மட்டக்களப்பைச் சேர்ந்த அக்கரைப்பற்றுக் கிராமத்தில் ஸ்ரீ ராமக்கிருஷ்ணசங்க வித்தியாலய மண்டபத்தில் இம்மாசம் 15ந்வ உயர்திரு சுவாமி நடராஜானந்தா அவர்கள் தலைமையில் பொன்விழா கொண்டாடப்பட்டது.

மாலை 3 மணிக்கு சுவாமியின் திருவுருவச்சிலை யானைமீதுவைத்து மேளதாளத்துடன எடுத்துச் செல்லப்பட்டது. ஏராளமான சனங்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள் இடையிடையே பூரண கும்பங்கள் வைத்துச் சுவாமியை வரவேற்ருர்கள் ஊர்வலம் முடிந்து மண்டபத்தை மாலை 5-30 மணிக் கடைந்ததும் குருமகராஜருக்குப் பூசை ஆரம்பமாயிற்று. பூசை முடிந்ததும் தலைவர் தமது தலைமைப் பேச்சை நிகழ்த்தினார். அவ்வமயம் இராமக்கிருஷ்ண சங்கம் இலங்கையில் ஸ்தாபிதமாகியது 1897ம் ஆடு என்றும் சுவாமி விவேகாநந்தர் சிக்காக்கோ மகாநாடு சென்று திரும்பும்போது கொழும்பு வந்தாரென்றும்சங்கம்அப்பொழுதே ஸ்தாபிதமாயிற்று என்றும் கூறினார். தொடர்ந்து பேசுகையில் இராமக்கிருஷ்ணர் சமரசவாதி யென்றும கடவுளை நேரில் கண்டவரென்றும் வருங்காலத்துக்கு இத்தகைய சமரசமதம்தான் வழிகாட்டும் என்றும் பேசினர்.

அடுத்தபடியாக ஸ்ரீ இராசமாணிக்கம் அவர்கள் B. A. வெறும் வயிற்றுக்குச் சமயமில்லை என்றும் அரசியலில் முன்னேற வேண்டும் என்றும் பொருளாதாரம் உயரவேண்டும் என்றும் இதுவே சுவாமி விவேகாநந்தரது கொள்கையென்றும் சிறந்த சொற்பொழிவாற்றினர். அப்பால் பாலபண்டிதை கங்கேஸ்வரி அம்மாளவர்கள ஸ்ரீராமக்கிருஷ்ணரும்பெண்மணிகளும என்னும் விஷயத்தில் சொற்பொழிவாற்றினர்கள். பின்பு பண்டிதர் V. S. கந்தையா அவர்களும், ஸ்ரீ K. K. ஆறுமுகதேசிகர் அவர்களும் சொற்பொழிவாற்றினர்.

இடையிடையே ஸ்ரீ Y. விவேகானந்தன் திரு. S கணபதிப்பிள்ளை திரு G. பாலசுப்பிரமணியம் ஆதியோர் பாடிச் சபையை மகிழ்வித்தனர். 9-30மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது. அன்பர்கள் உணவருந்திச் சென்றனர்.

—கடித.

## உபசாரணைக் கூட்டம்

15–3–47 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தொல்புரம், சிதம்பர அம்பலவாண சுவாமி மானு முதலியார் மடத்தில், மேற்படி மட பரிபாலன சபைத் தலைவரான திரு. மு. கிருஷ்ணர் அவர்களை அரசாங்கத்தார்கௌரவித்து சமாதானநீதவான் (J. P.)பட்டம் வழங்கியமை குறித்து ஓர் உபசாரணை விழா சங்கானைக் கிராமச்சங்கத் தலைவர் திரு. ஆ சி. நவரத்தினம் அவர்கள் தலைமையில்நடைபெற்றது. அவர் தமது தலைமையுரையில் திரு. மு. கிருஷணர் அவர்கள்பல ஆண்டுகளின் முன்னரேயே மலாயாவில் சமாதான நீதவான் பட்டம் பெற்றுள்ளாரென்றும், பின்னர் இலங்கையில் முகாந்திரப் பட்டம் பெற்ருரென்றும், தற்போது சமாதான நீதவான் பட்டம் பெற்ருர் என்றும், பொதுநல சேவையில் மிகச் சிறந்தவரென்றும், அவருக்கு இப்பட்டம் மிகப் பொருத்தமானதே என்றும், எங்கள் அயலில் இப்படியான சமாதான நீதவானின் தேவை மிக அவசியமென்றும், இதனுல் கிராமத்துக்கே பெருமை என்றும், சுற்ருடலிலுள்ளார் மிக நன்மை பெறுவரென்றும், இவர் குணத்துக்கேற்க இன்னும் கௌரவிக்கப்படுவாரென்றும் பாராட்டிப் பேசினர். பின்னர் திரு. கா. தில்லையம்பலம் B. A., திரு. இ. தம்பையா, திரு. செ. கந்தையா என்போர் அவரை உபசரித்துச் சுருக்கமாகப் பேசினர்.

இதன்பின் சிற்றுண்டி, தேனீர் வழங்கப்பட்டன.

—கடித

## சைவப் பிரசங்கம்

சித்தங்கேணியில் எழுந்தருளிய மகா கணபதிப்பிள்ளையார் கோவிலில் நிகழும் பங்குனிமீ கஙு-ந் திகதி (26-3-47) புதன்கிழமை மாலை 6மணி தொடக்கம் விநாயகப் பெருமானுக்குச் சதுர்த்தி விசேஷ ஆராதனையும் உற்சவமும், நிகழும். பின் கோவிலிலுள்ள தம்ப மண்டபத்தில் "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்னும் விஷயமாக இந்துசாதனப்பத்திரிகையாசிரியராகிய பண்டிதர் ம.வே. திரு ஞானசம்பந்தப்பிள்ளையவர்கள் பிரசங்கஞ் செய்வார்.

## சங்கானை விவசாய சங்கக் கூட்டம்

12.3.47 சாயந்தரம், 5.30 மணியளவில் மேற்படி சங்கத் தலைவர் திரு. S, ஆறுமுகம் அவர்களின் தலைமையில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

1. அரசினரால் விவசாயிகளுக்கு தண்ணீர் வசதி அளிக்கப்பட வேண்டும். 2. இந்த வருஷம் மழையினல் நஷ்டப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடும் இலவச விதைநெல்லும் கொடுக்கப்படவேண்டும். 3. விவசாயிகளுக்கு அரசினரால் ஒதுக்கப்பட்ட மூலதனங்கள் சமயமாகவழங்கப்படவேண்டும் என்னும் தீர்மானங்கள் ஏகமனதாகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

—கடித

## இலங்கைப் பெண்களின் பிரதிநிதி

அகில இலங்கைப் பெண்கள் மகாநாட்டின் பிரதிநிதியாக, இப்போது டெல்கியில்உத்தியோகார்த்தமாகநிற்கும் ஸ்ரீமதி நிலாம்என்னும் முஸ்லிம் பெண்மணி, ஆசிய மக்கள் மகாநாட்டிற் பங்குபற்றுவார் என்று தெரிகிறது.


நல்ல செய்தி!

பொய்ப்பல், சுத்திசெய்தற்கு மிக உவந்த

# கெரேடன்ற்

எனும் உயரிய தூள்

விலை: போத்தல் ஒன்று ரூபா 2—00

தனி ஏஜண்டுகள்

தி. ஒவர்ஸீஸ் கம்மேர்ஷியல்
(சிலோன்) ஏஜென்ஸி லிமிற்றெட்
தபாற் பெட்டி: இல. 44
167. நோறிஸ்றேட்
கொழும்பு

M. 338—7 25.3.47

# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3.47)

# தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைதது்க் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
ரீசா முதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம.

Mis. 211 1.11.46—30-4-47 (வெ)


விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை

# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். ரூ. ச. | வெளியூர். ரூ. ச. | மலாய்நாட்டுக்கு. ரூ. ச |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்டப்படல் வேண்டும்

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Friday, March, 21, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org